ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

# 2021 வருடத்திற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்

2021வருடத்திற்கான பண்டங்கள் சேவைகள் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குவதற்கு விருப்பங்கொண்ட அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் மதியுரை சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**<u>தொகுதி எண்</u>**

**1.<u>இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் / நிர்மாண வேலை மற்றும் பொருத்துதல்கள்</u>**

1.1 வளிச் சீராக்கல் இயந்திரங்கள்
1.2 Monopol / Pylon

**2. <u>அச்சிடல்</u>**

2.1 சகல வகையான கடித உறைகள்.
2.2சகல வகையான மாதிரி படிவங்கள், பதிவேடு மற்றும் புத்தகங்கள்.
2.3 சகல விதமான பிரச்சார படிவங்கள்.
2.4 பாஸ் புத்தகங்கள் மற்றும் உறைகள் (Plastic Covers)
2.5 பாதுகாப்பு அச்சிடல் (நிலையான வைப்புச் சான்றிதழ், ATM அட்டைகள்)

**3. <u>நானாவிதம்</u>**

3.1 சகலகாகிதாதிகள்
3.2 அச்சிடல் காட்ரிஜ்ரிப்பன் மற்றும் டோனர் (Cartridges & Toners)
3.3 கணணி காகிதாதிகள் (புற ஊதா கையொப்ப அட்டை (Black light Signature card) Pin Mailers, carbonized & Thermal continue sheet)

**4. <u>ஒப்பந்தகாரர்கள்</u>**

4.1 கட்டிடங்கள்
4.2 அலுமினியம் வேலைகள் மற்றும் பொருத்துதல்கள்
4.3 கிளை உள்ளக பொருத்தல்கள்

**5. <u>மதியுரை சேவைகள்</u>**

5.1 மின் பொறியியல் சேவைகள்
(வளிச் சீராக்கி, மின்கம்பி இணைப்புகள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் மற்றும் ஏனையவை)

**6.** மதியுரையற்ற சேவைகள் (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு)
6.1 மோட்டார் வண்டி பழுதுபார்த்தல்
6.1.2 இயந்திர பழுதுபார்த்தல்
6.1.3 மின்சார பழுதுபார்த்தல்.
6.1.4 டின்கரிங் மற்றும் வர்ணம் பூசுதல் (Tinkering & Painting)
6.2 வாகன பராமரிப்பு மற்றும் சேவை செய்தல்.

**கவனத்தில் கொள்ளவும்**
பிரதே சரீதியாக (கொழும்புக்கு வெளி இடங்களில்) பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கக் கூடியவர்கள் உரிய மாகாண ரீதியாக விபரங்களை அவர்களின் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தங்கள் தொடர்பில் நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA)/ முன்னைய ICTAD அல்லது தேசிய நிர்மாணத்துறை நிறுவனத்தில்(NCASL) அவ்வவ் துறைகள் தொடர்பான செல்லுபடியான பதிவினை பெற்றிருத்தல் மற்றும் செல்லுபடியான வியாபாரபதிவுச் சான்றிதழுடன் அவை கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ச்சியாகபெற்றிருத்தல் வேண்டும்.

மதியுரை சேவைகள் தொடர்பில் உரிய நிறுவனம் அல்லது நபர்கள் அவ்வவ் துறைகளில் பட்டயம் பெற்ற அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்பதுடன் உரிய நிபுணத்துவம் பெற்றதன் பின்னர் ஆகக் குறைந்தது மூன்று வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

## <u>வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்</u>

**சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**

**01.** விண்ணப்பதாரி இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபாரியாக இருக்க வேண்டும் என்பதுடன் வியாபார முகவரியில் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் வசதிகள் இருப்பது மிகவும் உகந்தது. (வியாபார பெயர் பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

**02.** ஒப்பந்தகாரர்கள் செல்லுபடியான CIDA அல்லது NCASL பதிவு பெற்றிருக்கவேண்டும் (முன்னைய ICTAD)

**03.** விண்ணப்பதாரிகள் அரசாங்க திணைக்களம், சட்ட ரீதியான சபைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் அண்மிய வருடங்களில் இவ்வாறான கட்டளைகளைப் பெற்று திருப்திகரமான வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றி உள்ளதைப் பற்றிய எழுத்து மூல சாட்சிகள் காட்டவேண்டும். அண்மிய 03 வருட காலப்பகுதியினுள் பெற்றுக்கொண்டுள்ள கட்டளைகள் பற்றிய தகவல்களை வழங்குவது மிகவும் உகந்தது

**04.**இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்தலுடன் கூடிய பண்டங்களை வழங்க எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் உரிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள தேவையான சந்தர்ப்பங்களில் தொழிற்சாலை வசதிகளை தம் வசம் கொண்டிருக்க வேண்டும்.

**05.**விண்ணப்பதாரிகள் ரூபா 500,000/= இற்கு மேற்பட்ட கட்டளைகளை வழங்க எதிர்பார்ப்பார்களேயானால் அதற்கு தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்கள் உள்ளது என்பதற்கான எழுத்து மூல சாட்சி சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் கடந்த மூன்று வருடங்களுக்குரிய (2017,2018,2019) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியறிக்கைகளின் நிழற்பிரதிகளை சமர்ப்பிக்கவேண்டும்.

**06.**விண்ணப்ப படிவங்களை எமது **www.rdb.lk** இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இம்மாதிரி படிவத்தின் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**07.** ஒருதொகுதியின் கீழ் உள்ள உப பிரிவுகளுக்கு ஒரே விண்ணப்பபடிவத்தின் கீழ் விண்ணப்பிக்கமுடியும் என்பதுடன் பிரதானதொகுதிக்கு மீளச் செலுத்தப்படாத ரூபா1,000 வீதம் (பிரதான 06 தொகுதிகளுக்கும் வெவ்வேறாக பதிவுக்

கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.) பதிவுக்கட்டணம் விண்ணப்பப்படிவங்கள் கையளிக்கப்படும் போது ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும். சகல உப பிரிவுகளும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

08.**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2021.01.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** பிரிவுத் தலைவர், மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம், பிரதேச அபிவிருத்தி வங்கி, தலைமை அலுவலகம், இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி எனும் முகவரிக்கு அல்லது மத்திய, ஊவா, சபரகமுவ, கிழக்கு, வடமேல், வடமத்திய, மேல் மற்றும் தென் மாகாண அலுவலகங்களுக்கு கையில் கொண்டு வந்து பாரமளிக்க வேண்டும்.

09. விண்ணப்பப்படிவம் இடப்படும் உறையில் இடது பக்கமேல் மூலையில் **வழங்குனர்களை பதிவு செய்தல் 2021 மற்றும் தொகுதி எண்களை** தெளிவாக குறிப்பிட வேண்டும்.

10. விண்ணப்பதாரிகள் பெறுமதி கூட்டப்பட்டவரி (VAT) பதிவு செய்திருப்பின் அவ் இலக்கத்தை கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட்டிருக்காவிட்டால் அதைப்பற்றிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள கடிதத்தினை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்கவேண்டும்.

11. வியாபாரபெயர் பதிவு சான்றிதழ், கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள், (கடந்த மூன்று வருடங்களுக்குரிய) (உரியதாயின்) இவ்வாறான கட்டளைகளை பெற்றுதிருப்திகரமாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவு செய்துள்ளதாக எழுத்து மூல சான்று. (கொள்வனவு செய்யப்பட்ட கட்டளைகள் அல்லது ஒப்பந்தங்களின் பிரதிகள்). பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் மறு அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகள் வழங்குனர்களாக பதிவு செய்யப்படமாட்டார்கள்.

12.ரூபா1,000 செலுத்தி விண்ணப்ப பத்திரங்களை வங்கிக்கு கையளிப்பது பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படமாட்டாது.

13.ஆளணி உறுப்பினர்கள் அல்லது வாழ்க்கைத்துணை அல்லது அவர்களின் பிள்ளைகள் விண்ணப்பதாரி/ உரிமையாளர்கள்/ பங்குதாரர் அல்லது பணிப்பாளர்களாக உள்ள நிறுவனங்கள் வழங்குனர்களாக பதிவுசெய்யப்பட தகுதி பெறாது.

14. ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் வங்கியின் தீர்மானத்தின் படி தகுதிகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை பதிவு செய்யும் உரிமை வங்கிக்கு உரியதாகும். மேலதிக விபரங்களை நிர்வாக முகாமையாளர் ஐ 011-2035454 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பிரிவுத் தலைவர் - மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்,
பிரதேச அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
இல.933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

தொலைபேசி 011 2035470 / 011 2035454
தொலை நகல் 011 2906883